

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 302 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 29 – திங்கள்கிழமை 12 ஜூன் 2023 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 302 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 29 - Monday 12 June 2023 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## கடந்த 9 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு

# தமிழ்நாட்டிற்குச் செய்தது என்ன?

## சேலத்தில் நடைபெற்ற கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!



முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம், சேலத்தில் நடைபெற்ற சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டக் கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக மாவட்டச் செயலாளர்கள் இரா.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம், கழக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கிளைக்கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சேலம், ஜூன் 12-

**ஒன்பது ஆண்டு ஒன்றிய பா.ஜ.க ஆட்சியில் தமிழ்நாட்டுக்குச் செய்த சிறப்புத் திட்டங்கள் என்ன என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களால் பட்டியல் போட முடியுமா? என்று கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில் வினா எழுப்பியுள்ளார்.**

சேலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்துக்குத் தலைமையேற்றுக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு.

சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு ஆகிய மாவட்டக் கழகங்களுக்கு உட்பட்ட, மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள் பங்குபெறும் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தெம்போடு, ஒரு இறுமாப்போடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கின்ற சூழலில் நான் கலந்து கொள்ளும் முதல் மாவட்டக் கழகக் கூட்டமாக இந்த ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகக் கூட்டமானது அமைந்திருக்கிறது.

கழகத்தில் தொண்டனுக்குத் தொண்டராய் செயல்வீரனுக்கு செயல்வீரராய் களத்தில் முதல் போர் வீரனாய் இருந்து மறைந்த அண்ணன் வீரபாண்டியாரைத் தந்த சேலத்தில் இந்த கூட்டம் நடக்கிறது.

நம்முடைய பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் சொன்னது போல, சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் இணைக்கப்பட்டு, திராவிடர் கழகம் உருவான ஊர் இந்த சேலம். நம்மை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட 'அண்ணாதுரை தீர்மானம்' இதே சேலத்தில்தான், திராவிடர் கழகத்தை உருவாக்கியது. சமூகச் சீர்திருத்த இயக்கமான திராவிடர் கழகத்தில் இருந்து அந்தச் சீர்திருத்த எண்ணங்களைச் சட்டபூர்வமாக நடைமுறைக்குக் கொண்டு வர திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைக் கண்டார், பேரறிஞர் அண்ணா அவர்கள். இதே சேலத்தில் தங்கி இருந்து தான் கனல் கக்கும் வசனங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

**என் வாழ்வில் மறக்க முடியாத ஊர்**

எனது வாழ்விலும் மறக்க முடியாத ஊர் இந்த சேலம்! 1996ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1997ஆம் ஆண்டு நடந்த 'சேலம் மாநாடு' மூன்று நாட்கள் நடந்தது. அந்த மாநாட்டில் எனக்கு மிகப்பெரிய பெருமை ஒன்று கிடைத்தது. அந்த பெருமையை ஏற்படுத்தித் தந்தவர் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்கிறேன். பல்லாயிரக்கணக்கான தி.மு.க. தொண்டர்கள் அணிவகுக்கும் ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் பெரும் பேறை எனக்கு உருவாக்கித் தந்தார்.

**இந்த மண்ணில் எந்தக் காலத்திலும், எந்த சக்தியாலும் தி.மு.க.வை வீழ்த்த முடியாது என்ற நிலையை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உருவாக்கிக்கொண்டிருக்கிறேன் என்றால், அதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் உறுதுணையாக இருக்கிறீர்கள். தொடர்ந்து இருக்க வேண்டும். இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. உங்கள் உழைப்பு வீண் போகாது! உழைப்புக்கேற்ற அங்கீகாரம் நிச்சயம் உங்களுக்கு வந்து சேரும். நான் இருக்கிறேன், நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது.**

இங்கிருக்கும் கழக முன்னோடிகள் எல்லாம் மறந்திருக்க மாட்டீர்கள். மாலை 5 மணிக்குத் தொடங்கிய பேரணி, விடிய விடிய நடந்தது. தலைவர் கலைஞர் அவர்கள், மாலை 5 மணிக்கு ஊர்வலத்தைப் பார்வையிட மேடையில் வந்து அமர்ந்தார். மறுநாள் காலை 8 மணி வரைக்கும் பேரணி முடியவில்லை, இன்னும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் 8 மணிக்கு மாநாட்டு திடலில் கழக கொடியேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் கலைஞர் அவர்கள் புறப்பட்டுச் சென்றார்.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், அப்படிப்பட்ட மாபெரும் பேரணிக்கு தலைமை தாங்கும் வாய்ப்பு இந்த அடியேனுக்குக் கிடைத்ததை எண்ணி இன்றைக்கும் நான் பெருமைப்படுகிறேன்.

அதேபோல் மூன்று நாள் மாநாட்டில் முதல் நாள் நிகழ்ச்சி முழுவதும் இளைஞரணி மாநாடாக நடத்திக் கொள்ளவும் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் நமக்கு அனுமதி தந்தார்கள். அந்த மூன்று நாள் மாநாட்டில் ஒரு நாள் நம்முடைய இளைஞரணி மாநாடு நடந்தது.

1997ஆம் ஆண்டு நடந்த சேலம் மாநாட்டில் பேரணிக்குத் தலைமை வகித்து வந்த நான், 2004ஆம் ஆண்டு மாநாட்டில் 50 அடி உயரத்தில் கழகக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பை அண்ணன் வீரபாண்டியார் அவர்களால் பெற்றவன்தான் இந்த ஸ்டாலின். 'வீரபாண்டி அழைக்கிறார்' என்று தலைவர் அழைப்பு விடுத்தார். உடன்பிறப்புகளுக்கு எழுதிய கடிதத்தில் அந்த மாநாட்டைப் பற்றி எழுதினார். அந்த நினைவலைகளில் நீந்தியவனாக உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை இந்த ஆண்டு முழுவதும் நாம் கொண்டாடப் போகிறோம். அதற்காகக் கழகத்தின் உயர்நிலைச் செயல்திட்டக் குழு கூட்டம் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்.

**தீர்மானங்களை செயல்படுத்திடுவீர்**

'ஊர்கள் தோறும் தி.மு.க.' என்ற தலைப்பில் ஒவ்வொரு ஊரிலும் கழகத்தின் கொடிக் கம்பங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்றும்,

'கழகமே குடும்பம்' என்ற தலைப்பில் கழக முன்னோடிகளுக்கும், கழகக் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளின் கல்விக்கும் நாம் உதவிட வேண்டும் என்றும்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### சேலம் மாநகரம் - அண்ணா பூங்காவில் - நேற்று

## முத்தமிழறிஞர் கலைஞருக்கு 16 அடி உயர வெண்கலச் சிலை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சேலம், ஜூன் 12 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் மாவட்டத்தில் நேற்று பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் மாவட்டத்தில் நேற்று (11.06.2023) சேலம் மாவட்டம், கருப்பூர் அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதலாவதாக, நேற்று (11.06.2023) காலை 9.30 மணியளவில் சேலம் மாநகராட்சி, அண்ணா பூங்கா வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 1,713 சதுரடி பரப்பில் 4 அடி உயரத்தில் பீடமும், 16 அடி உயரத்தில் முழு உருவ வெண்கலச்சிலையும் நிறுவப்பட்டுள்ளது. அவ்வாறு நிறுவப்பட்டுள்ள முழு உருவ வெண்கலச்சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**உயர் மட்டப் பாலங்கள்**

பின்னர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மேட்டூர் மற்றும் எடப்பாடி நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள், போடி நாயக்கன் பட்டி ஏரி, மூக்கனேரி, அல்லிக் குட்டை ஏரி புனரமைத்து அழகுப்படுத்தும் பணிகள், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு சாலைப் பணிகள், உத்தமசோழபுரம் திருமணிமுத்தாற்றின் குறுக்கே மற்றும் தென்னங்குடிபாளையம் வசிஷ்ட ஆற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**புதிய திட்டப்பணிகள்**

மேலும், தலைவாசலில் குடியிருப்புடன் கூடிய புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், பல்வேறு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வேளாண் அங்காடி, சுற்றுச்சுவர், தானிய சேமிப்புக் கிடங்கு, உலர்களம், விவசாய வியாபார மையம் மற்றும் கிடங்கு நவீனமயமாக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**கட்டுமானப் பணிகள்**

சேலம் மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பழைய பேருந்து நிலையம், பெரியார் பேரங்காடி, போஸ் மைதான வணிக வளாகம், வ.உ.சி மார்க்கெட், நேரு கலையரங்கம் ஆகியவை மறு சீரமைப்புப் பணிகளும், புதிய பேருந்து நிலையம் அருகில் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம், தொங்கும் பூங்கா வளாகத்தில் நான்கு சக்கர, இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், ஆனந்தா பாலம் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம், பள்ளப்பட்டி ஏரி புனரமைப்புப் பணி, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமான பணிகள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**குடிநீர் திட்டப்பணிகள்**

அதேபோன்று, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் சிமெண்ட் சாலை, கான்கிரீட் சாலை, குடிநீர் வசதி, உள்ளிட்ட பல்வேறு பணிகளும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூ.653 கோடி மதிப்பீட்டில் இளம்பிள்ளை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப் பட்டி, மல்லூர், இடங்கணசாலை ஆகிய 5 பேரூராட்சிகள் மற்றும்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### கழகம் கடந்து வந்த நீண்ட பயணத்தை

## தலைமுறைகள் தாண்டியும் அறியச் செய்வோம்!

### புதுப்பொலிவூட்டப்பட்ட தி.மு.க. இணையதளத்தை துவக்கிவைத்து

### முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூன் 12–

"கழகம் கடந்து வந்த நீண்ட பயணத்தை தலைமுறைகள் தாண்டியும் அறியச் செய்வோம்" என்று முதல்வரும் – கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுப்பொலிவூட்டப்பட்ட தி.மு.க. இணைய தளத்தை துவக்கி வைத்து ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

முதல்வர், கழகத் தலைவர் அவர்கள், நேற்று முன்தினம் (10.6.2023), காலை, சென்னை, ஆழ்வார்பேட்டை, சித்தரஞ்சன் சாலையில் உள்ள அவரது இல்லத்தில், புதுப்பொலிவூட்டப்பட்ட தி.மு.க. இணையதளமான DMK.inஐ துவக்கி வைத்தார்.

இவ்விணைய தளத்தினைத் துவக்கி வைத்த கழகத் தலைவர் அவர்கள் தனது ட்விட்டர் பக்கமான https://twitter.com/mkstalin/status/1667399911133024258?S=46ல் பதிவிட்டிருப்பதாவது:–

**"இயக்க வரலாறு, அண்மை நிகழ்வுகள், நமது சாதனைகள் என இன்னும் பல தகவற்புதையல்கள் நிறைந்த, புதுப்பொலிவூட்டப்பட்ட DMK.in கழக வலைதளத்தை #கலைஞர்100 கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இன்று தொடங்கி வைத்தேன்.**

**கையெழுத்துப் பிரதி இதழ்கள் முதல் கணினி வரை கழகம் கடந்து வந்த நீண்ட பயணத்தை தலைமுறைகள் தாண்டியும் அறியச் செய்வோம்!" - எனக் குறிப்பிட்டுள்ளார்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

### மல்லிகார்ஜுன கார்கேவின் கடிதத்திற்கு

## பிரதமர் மோடி பதிலளிக்க மறுப்பது ஏன்?

### ப.சிதம்பரம் கேள்வி!

புதுடெல்லி, ஜூன் 12 -

பாலசோர் ரயில் விபத்து பற்றிய எதிர்க்கட்சித்தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் கடிதத்திற்கு பிரதமர் மோடி பதில் அளிக்க மறுப்பது ஏன் என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் ஒன்றிய முன்னாள் அமைச்சருமான ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

பிரதமருக்கு காங்கிரஸ் தலைவர் கார்கே எழுதிய கடிதத்திற்கு நான்கு பா.ஜ.க. எம்.பி.க்கள் அளித்திருக்கும் பதில், எந்த விமர்சனத்தையும் ஏற்றுக்கொள்ளாத பா.ஜ.க.வின் முழுமையான சகிப்புத் தன்மையின்மைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு என குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கக் கூடிய கார்கேவுக்கு, பிரதமருக்கு கடிதம் எழுத உரிமை உண்டு. செயல்படக்கூடிய ஜனநாயக நாட்டில், பிரதமர் அந்தக் கடிதத்திற்கு பதில் அளிக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் இதுவெல்லாம் பதில் சொல்லத் தகுதியற்றது என்று பிரதமர் கருதும் அளவுக்கு நமது ஜனநாயகத்தின் தற்போதைய நிலை இருக்கிறது.



மாறாக, கார்கேவின் கடிதத்திற்கு நான்கு பா.ஜ.க. எம்.பி.க்கள் அளித்துள்ள பதில் உண்மைத்தன்மை இல்லாததாகவும் வாதத்திற்கு ஒவ்வாததாகவும் உள்ளது.

அதேசமயம், கடந்த 2022 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு சி.ஏ.ஜி. அறிக்கைகள் கார்கேவின் குற்றச்சாட்டில் உள்ள நியாயத்தை முழுமையாக உறுதிப்படுத்துகிறது.

பாலசோர் போன்ற ஒரு சோகம் நடக்க வாய்ப்புள்ளது என்பதை முன்னறிவிப்பதாக தென்மேற்கு ரயில்வேயின் முதன்மை தலைமைச்செயல் அதிகாரி எழுதிய கடிதம் கோப்புகளில் தூசு தட்டிக்கொண்டிருக்கிறது. அந்த கடிதத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை பா.ஜ.க. எம்பிக்கள் கூறுவார்களா? என்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.